## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

## அசல் வழக்கு எண். 51 /2018

PW1 – திரு. ஜான் நாள். 13.02.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்திற்கு 1 ம் பிரதிவாதி சரண்யா பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் தாவா சொத்து எனது பாட்டையா செங்கோல் உடையாரிடம் கிரையம் வாங்கி அவரின் வாரிசின் வாங்கியதன் அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் விஸ்தீரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் யாகு சவரியாயி, சவரிமுத்து உடையாருக்கு கிரையம் எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

4. எனது பாட்டையாவின் பெயர் சூசை உடையார் அவருக்கு வேதமுத்து, குழந்தைச்சாமி என இரண்டு மகன்கள். எனது பாட்டையா தாவா சொத்தை யாரிடம்

இருந்து எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 10.05.1935 ம் தேதி செங்கோல் உடையாரிடம் இருந்து. வா.சா.ஆ.2 ஆவணத்தின் நான்கு மால் என்னவென்றால், தாவா சொத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு பக்கத்தில் லாடக்கோனாரின் சொத்துக்கள் உள்ளது. தெற்கு பக்கம் லூர்து உடையாரின் சொத்தும், மேற்கு பக்கம் அருளானந்து உடையாரின் சொத்தும் உள்ளது.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தின் நான்கு மால் என்னவென்றால், தாவா சொத்திற்கு கிழக்கு மற்றும் வடக்கு பக்கத்தில் லாடக்கோனாரின் சொத்துக்கள் உள்ளது. தெற்கு பக்கம் மைக்கேல் உடையாரின் சொத்தும், மேற்கு பக்கம் சவரிமுத்து உடையாரின் சொத்தும் உள்ளது.

6. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆணவங்களில் தாவா சொத்தை எவ்வாறு வகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்றால் புஞ்சை என காட்டப்பட்டுள்ளது. பிராதில் என்ன நான்கு மால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தாவா சொத்திற்கு வடக்கு பக்கத்தில் கருப்பாயி, முத்துக்கண்ணு சொத்துக்கள் உள்ளது. தெற்கு பக்கம் லூர்து மேரி, அந்தோணி சொத்தும், மேற்கு பக்கம் எனது இடமும், கிழக்கு பக்கம் பாதையும், ரமேஷ் வீடும் உள்ளது.

7. தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் சொத்து வைத்திற்கும் அந்தோணி என்பவர் எனது சகோதரர், மேலும் லூர்து மேரி என்பவர் எனது தாயார் ஆவார். அந்தோணிக்கும், லூர்து மேரிக்கும் தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள சொத்து அரசாங்கத்தால் ஒப்படைப்பு பட்டா மூலம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஒப்படைப்பு பட்டா எப்போது வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

8. மேற்படி ஒப்படைப்பு பட்டா சுமார் 6 வருடங்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டது என்றால் 5 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தில் மேற்கு பக்கத்தில் உள்ள எனது சொத்து எனக்கு ஒப்படைப்பு பட்டா மூலம் பெறப்பட்டதா என்றால் அவ்வாறு

பெறவில்லை எனக்கு அது அனுபவ பாத்தியப்பட்டது. மேற்படி தாவா சொத்திற்கு மேற்கு பக்கத்தில் உள்ள எனது நிலமானது வருவாய்த்துறை ஆவணங்களில் நத்தம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான், 1954ம் ஆண்டுக்கு முன்னால் மேற்படி நிலம் புஞ்சையாக இருந்தது, பின்பு எஸ்.எல்.ஆர். சர்வேக்கு பின்பு நத்தம் என வகைப்படுத்தப்பட்டது.

9. மேற்படி மேற்கு பக்கத்தில் உள்ள எனது நிலத்தை மட்டும் நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டதா என்றால் இல்லை வீடுகள் இருந்த பகுதியை தவிர மீதம் உள்ள அனைத்து நிலங்களையும் 1954க்குப் பிறகு நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டது. மேற்படி மேற்கு பக்கத்து நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என கோரி நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1935ம் ஆண்டு இயற்றப்பட்ட கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

10. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆவணங்கள் படி கிரையம் பெறப்பட்ட சொத்தின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 7 செண்ட். மேற்படி 7 செண்ட் என்பதற்கு வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் தவிர வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் பழைய எண்.104/2, புதிய எண் 162/27 ஆகும். தாவா சொத்து மேற்படி சர்வே நம்பருக்கு உட்பட்டது தான் என கூறுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன், அவைதான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆகும்.

12. மேற்படி வேதமுத்து மற்றும் குழந்தைச்சாமி ஆகியோர்களின் வாரிசுகள் யார் யார் என்றால் வேதமுத்துவின் வாரிசுகள் முதல் மனைவி லூர்து அம்மாள் மற்றும் அவருக்கு பிறந்த சவரிமுத்து, ஜோசப், சந்தியாகு ஆவார்கள், இரண்டாவது மனைவி பிரான்சிஸ் மேரிக்கு பிறந்த செபஸ்தியம்மாள் மற்றும் மைக்கேல் ராஜ் ஆவார்கள்.

மேலும் குழந்தைச்சாமியின் வாரிசுகள் அருள்தாசன், பீட்டர்ராசன், ராணி மற்றும் லதா ஆவார்கள். மேற்படி வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தாவா சொத்தை என் தகப்பனாருக்கு வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொடுக்கப்பட்டதால் அவர்களை சேர்க்கவில்லை.

13. மேற்படி வாய் மொழி பாகப்பிரிவினை பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என் தகப்பனார் கூறி தெரியவந்தது. மேற்படி வாய் மொழி பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. மேற்படி வாய் மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யவில்லை. என்னுடன் பிறந்தவர்கள் எனது மூத்த சகோதரி ஜோஸ்பின் ரோஸ்மேரி மற்றும் இளைய சகோதரர் அந்தோணி ஆவார்கள். மேற்படி உடன் பிறந்தவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தாவா சொத்தை வாய் மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்டதால் அவர்களை சேர்க்கவில்லை.

15. தாவா சொத்தின் பழைய சர்வே நம்பர் 104/2 ன் படி அளவுகோல் எவ்வளவு என்றால் மேற்படி சர்வே நம்பரில் மொத்த ஊரும் அடங்கியிருந்தது அதற்கான விஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி பழைய சர்வே நம்பரில் உட்பட்ட சொத்துக்களை வருவாய் ஆவணங்களில் நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சூசை உடையார் என்பவரும், எனது தாத்தா சூசைமுத்து உடையார் என்பவரும் வேறு வேறு நபர்கள் என்றும், மேற்படி ஆவணத்திற்கும் எனது தாத்தா சூசைமுத்து உடையாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் எனது தாத்தாவை சூசை எனவும், சூசை முத்து எனவும்

அழைப்பார்கள், மேலும் பொதுவாக வருவாய்த்துறை ஆவணங்களில் சூசைமுத்து எனவும், சூசை எனவும் எனது தாத்தாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது பிராதில் கூறவில்லை என்றால் சரிதான்.

17. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தாத்தாவின் பெயரை சூசை இல்லை சூசைமுத்து என மறுத்தபடியால் தற்போது வழக்கிற்காக எனது தாத்தாவின் பெயரை சூசைமுத்து என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது)**